Your Real Estate Investment Consultant
Dedicated for your success
OPPORTUNITIES ARE WAITING...
CALL ME FOR A FREE CONSULTATION
BUY SELL INVEST
DIVAGARAN MANIKKAVASAGAR
416.888.7877

33ஆவது ஆண்டில்
விளம்பரம்
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
Tel: 416-282-8059
email: vlambaram@sympatico.ca
www.vlambaram.com
www.tamilvanakkam.com

துரித பணமாற்றுச் சேவை
மு. காசிப்பிள்ளை சக புத்திரர்கள்
3228 Eglinton Ave. E. Suite #3
(Eglinton & Markham)
Scarborough ON M1J 2H6
Tel: 416-267-8221
எமக்கு வேறு கிளைகள் எங்கும் இல்லை

நதி: 33 | பாலம்: 19 | சமூக முன்னேற்றப்பத்திரிகை | மாதமிருமுறை | இலவசம் | OCTOBER 01, 2023

# கனடா–இந்தியா இராஜதந்திர முறுகல் நிலை!

கனடியப் பிரதமர் ஜஸ்ரின் ரூடோ 2023 செப்ரெம்பர் 18ஆம் திகதி கனடிய நாடாளுமன்றத்தில் உரையாற்றும்போது "இந்திய அரசாங்கத்தின் முகவர்களுக்கும், கனடியக் குடிமகனான ஹர்தீப் சிங் நிஜ்ஜார் கொல்லப்பட்டதற்கும் இடையே சாத்தியமான தொடர்பு இருப்பதற்கான நம்பகமான குற்றச்சாட்டுகளை கனடியப் பாதுகாப்பு அமைப்புகள் தீவிரமாக விசாரித்து வருகின்றன. கனடிய மண்ணில் ஒரு கனடியக் குடிமகன் கொல்லப்பட்டதில் வெளிநாட்டு அரசாங்கம் ஒன்றின் தலையீடு இருக்குமானால் அது எம்மால் ஏற்றுக் கொள்ள முடியாத இறையாண்மை மீறலாகும். இது சுதந்திரமான வெளிப்படையான ஜனநாயக சமூகங்கள் கடைப்பிடிக்கும் அடிப்படை விதிகளுக்கு முரணானது. நீங்கள் எதிர்பார்ப்பது போல் இந்த மிகத் தீவிரமான விடயத்தில் எங்களுடன் நெருக்கமான உறவுகளைக் கொண்ட நாடுகளுடன் நாங்கள் ஒருங்கிணைந்து பணியாற்றி வருகிறோம்" என்று கூறியிருந்தார்.

CBC ஊடகத்தின் தகவலின்படி கனடியப் பிரதமர் கனடாவுடன் நெருங்கிய உறவுகளைக்கொண்ட இங்கிலாந்துப் பிரதமர் ரிஷி சுனக், பிரான்ஸ் அதிபர் இமானுவேல் மக்ரான் மற்றும் அமெரிக்க அதிபர் ஜோ பைடன் ஆகிய தலைவர்களுடன் இது விடயமாகக் கலந்து ஆலாசனை நடத்தியுள்ளார்.

2023 செப்ரெம்பர் 09ஆம் திகதி இந்தியாவில் நடைபெற்ற G20 நாடுகளின் மாநாட்டின்போது கனடியப்பிரதமர் ஜஸ்ரின் ரூடோவிற்கும் இந்தியப்பிரதமர் நரேந்திர மோடிக்கும் இடையே தனிப்பட்ட சந்திப்பு ஒன்று நடைபெற்றது. அதில் கனடியப் பிரதமர் இந்திய அரசாங்கத்தின் முகவர்களுக்கும் ஹர்தீப் சிங் நிஜ்ஜார் கொல்லப்பட்டதற்கும் இடையே சாத்தியமான தொடர்புகள் இருப்பது பற்றிக் கூறியிருந்தார். அதேவேளை இந்தியப் பிரதமர் கனடாவில் உள்ள சீக்கியர்கள் பிரிவினைவாதத்தை ஊக்குவிப்பதாகவும், இந்திய இராஜதந்திரிகளுக்கு எதிராக வன்முறையைத் தூண்டுவதாகவும், இராஜதந்திர வளாகங்களை சேதப்படுத்துவதாகவும், கனடாவில் உள்ள இந்திய சமூகத்தை அச்சுறுத்துவதாகவும் அவர்களின் வழிபாட்டுத்தலங்களை சேதப்படுத்துவதாகவும் குற்றம் சாட்டியிருந்தார் என இந்திய ஊடகங்களை மேற்கோள் காட்டி கனடிய ஊடகமான The Globe and Mail செய்தி வெளியிட்டிருந்தது.

இந்தியாவிற்கு வெளியே அதிகூடிய சீக்கியர்களைக் கொண்ட நாடாக கனடா உள்ளது. கனடாவின் சனத்தொகையில் 2.1%ஆனோர் (800,000) சீக்கியர். அவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் 18 நாடாளுமன்ற உறுப்பினர்கள் கனடிய நாடாளுமன்றத்தில் இருக்கின்றனர்.



CBC ஊடகத்தின் தகவலின்படி ஹர்தீப் சிங் நிஜ்ஜார் இந்திய அரசால் பயங்கரவாதியாகக் குற்றம் சாட்டப்பட்டு இன்ரபோலினுடைய (Interpol) தேடப்படுவோர் பெயர் பட்டியலில் அவரின் பெயரை பதியுமாறு இந்திய அரசால் கேட்கப்படிருந்தார். 2016 யூன் மாதத்தில் நிஜ்ஜார் கனடியப் பிரதமர் ஜஸ்ரின் ரூடோவைக் கனடியப் பாதுகாப்பு முகவர் மூலம் தனது பெயரை பயங்கரவாத சந்தேகநபர்கள் பட்டியலில் இருந்து நீக்குமாறு கேட்டுக் கடிதம் எழுதியிருந்தார்.

2022 யூலை மாதத்தில் இந்தியாவின் பயங்கரவாத எதிர்ப்புத் தேசியப் புலனாய்வு நிறுவனம் (NIA), இந்தியாவில் இருக்கும் பஞ்சாபில், இந்துமத குரு ஒருவர் மீது நடத்தப்பட்ட தாக்குதலுக்கு நிஜ்ஜார் மீது குற்றம்சாட்டி அவரைக் கைது செய்யத் தகவல் தருவோருக்கு பத்து இலட்சம் ரூபா ($16,200) வெகுமதி அளிப்பதாக அறிவித்திருந்தது. அவ்வேளையில் கனடியப் பாதுகாப்பு அமைப்பு நிஜ்ஜாரை அவதானமாக இருக்கும்படியும் அவர்மீது கொலை முயற்சிகள் மேற்கொள்ளப்படலாம் எனவும் எச்சரிக்கை செய்திருந்தது.

2023 யூன் 18இல் நிஜ்ஜார் பிரிட்டிஸ் கொலம்பியா மாகாணத்தில் சறேயில் (Surrey) உள்ள குருநானக் குருத்துவார் வாகனத் தரிப்பிடத்தில் இரண்டு ஆயுததாரிகளால் பலமுறை சுட்டுக் கொல்லப்பட்டார்.

2023 யூலை 8இல் வன்கூவர் மற்றும் ரொறொன்ரோ நகரில் அமைந்துள்ள இந்தியத் தூதரக அலுவலகங்களுக்கு முன்னால் நடைபெற்ற காலிஸ்தான் பேரணிகளில் இந்தியத் தூதர்களை "கொலையாளர்கள்" என்றும் "இந்தியா ஒழிக" எனவும் பதாகைகளுடன் சீக்கியர்கள் சென்றனர். அத்துடன் அப்பேரணியில் இந்திய உயர் ஆணையாளர் சஞ்சய் குமார் வர்மா மற்றும் அவரின் இரண்டு தூதரக அலுவலகங்களுக்கும் பொறுப்பான தூதுவர்களின் புகைப்படங்கள் நிஜ்ஜார் கொலையாளிகள் என்ற தலைப்புடன் கொண்டு செல்லப்பட்டன. அப்போது கனடிய வெளிவிவகார அமைச்சர் Melani Joly தனது டுவிட்டர் பதிவில், "இராஜதந்திரிகளின் பாதுகாப்புத் தொடர்பான விடயங்களை கனடா மிகவும் தீவிரமாக வியன்னா ஒப்பந்தத்தில் கூறியபடி மேற்கொள்கிறது. ஒரு சிலருடைய செயல்கள் ஒரு முழு சமூகத்தையும்

தொடர்ச்சி 05 பக்கம்

BUY & SELL THROUGH ME & SEE THE DIFFERENCE!
Kannan Nadarajah
416-889-1083
kannanhomes143@yahoo.com
Homelife/Future Realty Inc.

வீடு வாடகைக்கு வாங்க மற்றும் விற்க அணுகுங்கள்
www.ParaCity.ca
647-296-0596
TisiPara@gmail.com
Para Tisikulasingam
647 296 0596

Homelife GTA Realty
BUY/ SELL /LEASE
www.vanyhome.ca/
Life Insurance & Super Visa Insurance
www.vjsfinancial.ca
Vany Jeganmohan
REALTOR & INSURANCE ADVISOR
416-670-7436

FOR ALL YOUR REAL ESTATE NEEDS
GEORGE PARANTHAMAN
georgeparan1@gmail.com
416-277-9044
HomeLife GTA Realty Inc.
TRUTH BUILDS TRUST

FRANK ROSSO
REALTOR®
705-243-6023
info@frankrossorealtor.com
RE/MAX HALLMARK EASTERN REALTY
Expertise, Insight, Innovation: Redefining Real Estate
705-243-6023
AMANDA MCCASKIE
REALTOR®
CERTIFIED REAL ESTATE NEGOTIATION EXPERT
@AmandaMccaskieRealtor

BUYING / SELLING HOMES
BALA MANI MBA
Sales Representative
Contact: 647-290-1022 | 0605bala@gmail.com | visit: www.realtorbala.ca
* Lawyer Fee, Moving Cost, Staging all Free of Cost.
HomeLife/GTA Realty Inc. Brokerage
5215 Finch Ave. E. Suite 203, Toronto, ON. M1S 0C2
* We help to find your best future home!

Welcoming new patients of all ages since 2000 at ...
Bridletowne Dental
Dr. Jeyapalan, BDS., DDS.
(University of Toronto) Dentist
416 492 3775
Bridletowne Dental
385 Silver Star Blvd, Suite 217 Scarborough, M1V 0E3
(Midland & McNicoll, MAXUM Building, In the RONA PLAZA)
www.bridletownedental.com


2023
EXCLUSIVE INCENTIVES
Registration:
647-296-0596
THE GREATEST SALE
EXCLUSIVE INCENTIVES
ONE DAY ONLY!
FEATURING
THE 9HUNDRED
SIGNATURE RESIDENCES
THOMPSON TOWERS
THE·POST
THE FIFTH
HORSESHOE RESIDENCES
MUSKOKA BAY RESORT
fourme
Tricycle
Up to 75K in CASH back!
1.9% Mortgage for 2 Years!
Extended Deposit Structures!
Positive Cash Flows!
5% Down Programs!
Free Assignments!
Right to Lease during occupancy!
& More!
PARA TISIKULASINGAM
Sales Representative
(647) 296-0596
www.ParaCity.ca
HOMELIFE
HIGHER STANDARDS
HOME LIFE / GTA REALTY INC.,Brokerage*
*Independently Owned and Operated
5215 Finch Ave E, Unit 203, Toronto, ON MIS 0C2
O:416.321.6969 | F: 416.321.6963



Available Till Midnight
Including Weekends & Holidays

ANTON
DHARMASEELAN
MORTGAE AGENT

#1 Mortgage Agent in GTA
#2 in Canada

CALL ME FIRST
FOR ALL YOUR MORTGAGE NEEDS

PURCHASE
REFINANCE
SELF EMPLOYED
BAD CREDIT
INVESTMENT PROPERTY
RENEWAL

MAJOR BANKS
ALTERNATIVE LENDERS
B LENDERS
CREDIT UNIONS
TRUST COMPANIES
PRIVATE LENDERS

416 704 1200

anton@myhomemls.ca

MORTGAGE ALLIANCE
Broker # 10530
#200, 2005 Sheppard Ave. E.
Toronto, ON M2J 5B4

FAX: 1 866 566 3068

# ஒரு தமிழ் நீதிபதியின் வெளியேற்றம்




முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி ரி.சரவணராஜா பதவி விலகியுள்ளார். அவர் தனது பதவி விலகல் கடிதத்தை நீதிச்சேவை ஆணைக்குழுவிற்கு அனுப்பி வைத்துள்ளார்.

உயிர் அச்சுறுத்தல் மற்றும் தொடர்ச்சியான அழுத்தங்கள் காரணமாக தான் பதவி விலகுவதாக அறிவித்துள்ள முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி ரி.சரவணராஜா தற்போது நாட்டை விட்டு வெளியேறியுள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

அதாவது, குருந்தூர்மலை விவகாரம் தொடர்பிலான தீர்ப்பினை அடுத்து அவருக்கு அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் இனவாதிகள் மத்தியில் பலத்த எதிர்ப்பு ஏற்பட்டது. குருந்தூர்மலை தொடர்பான வழக்கில் நீதிபதி சரவணராஜா வழங்கிய கட்டளைகளை மாற்றியமைக்குமாறு தொடர்ச்சியாக அரச தரப்பால் அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டு வந்தன.

நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர நீதிபதி சரவணராஜாவை ஒரு மன நோயாளி என நாடாளுமன்றத்தில் வைத்து குறிப்பிட்டிருந்தார். நாடாளுமன்றத்திலும், வெளியிலும் கூட நீதிபதிக்கு தொடர்ச்சியான அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டு வந்தன.

அண்மையில் நீதிபதிக்கான பொலீஸ் பாதுகாப்பும் குறைக்கப்பட்டது. புலனாய்வாளர்கள் தொடர்ச்சியாக அவரை கண்காணித்து வந்தனர்.

சட்டமா அதிபர் அவரை தனது அலுவலகத்தில் கடந்த 21ஆம் திகதி அன்று சந்திக்க வருமாறு அழைத்து, குருந்தூர்மலை வழக்கின் நீதிமன்றக் கட்டளைகளை மாற்றியமைக்கும்படி அழுத்தம் பிரயோகித்துள்ளார். இவை குறித்து நீதிபதி சரவணராஜா ஊடகங்களிடம் வெளிப்படையாக தெரிவித்துள்ளார்.

மேலும், குருந்தூர்மலை வழக்குடன் தொடர்புபடுத்தி தனக்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றில் (Court of Appeal) தனது தனிப்பட்ட பெயர் குறிப்பிடப்பட்டு இரண்டு வழக்குகள் கோப்பிடப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இவையெல்லாம் நேர்மையான நீதிபதியான சரவணராஜாவிற்கு மிகுந்த மன உளைச்சலை ஏற்படுத்தியுள்ளன. தனக்கு உயிர் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார். இதன் காரணமாக தான் மிகவும் நேசித்த நீதிபதி பதவிகள் அனைத்தையும் துறந்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

குறித்த பதவி விலகல் கடிதத்தினை கடந்த 23-09-2023 அன்று பதிவுத் தபால் ஊடாக நீதிச்சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளருக்கு அனுப்பிவைத்துள்ளதாக தெரிவித்த அவர், அதன் பின்னரே நாட்டை விட்டு வெளியேறியுள்ளதாக தெரியவந்துள்ளது.

இந்நிலையில், ஒரு நீதிபதியை அழைப்பதற்கு சட்டமா அதிபருக்கு அதிகாரமில்லை என மனித உரிமை ஆணைக் குழுவின் முன்னாள் ஆணையாளர் அம்பிகா சற்குணநாதன் தெரிவித்துள்ளார். அவ்வாறு அழைத்திருந்தால் அது நீதித்துறையின் சுதந்திரத்தை குறைமதிப்பிற்கு உட்படுத்துவதாகும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஆனால், முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி சரவணராஜா தானாக முன்வந்து சட்டமா அதிபரை சந்தித்தார் என நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஸ கூறுகின்றார்.

முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி மேல் முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட ஐந்து வெவ்வேறு வழக்குகளில் பிரதிவாதியாக குறிப்பிடப்பட்டார் என்றும், இதன் காரணமாகவே அவர் தானாக முன்வந்து சட்டமா அதிபரை சந்தித்து ஆலோசனை நடத்தினார் என்றும் விஜயதாச ராஜபக்ஸ தெரிவித்துள்ளார். நீதி அமைச்சர் என்ற வகையில் அவர் தங்கள் தரப்பை நியாயப்படுத்தும் விதமான கருத்துக்களையே தெரிவிக்கின்றார்.

இதே வேளை, முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி ரி.சரவணராஜாவிற்கு ஏற்பட்டுள்ள உயிர் அச்சுறுத்தல் தொடர்பில் உடனடியான விசாரணைகளை முன்னெடுக்குமாறு இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் கௌசல்ய நவரத்ன குற்றப்புலனாய்வு பிரிவை கோருவதாக தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி ரி. சரவணராஜா தனக்கு உயிர் அச்சுறுத்தல் காணப்பட்டதால் நாட்டை விட்டு வெளியேறுவதாக பகிரங்கமாக அறிவித்திருக்கின்றார். உண்மையில், அவருக்கு உயிரச்சுறுத்தல் ஏற்படுத்தப்பட்டதா? அவ்வாறெனின் அது யாரால் விடுக்கப்பட்டது? அதனுடன் தொடர்புடைய தரப்புக்கள் எவை? என்பன தொடர்பில் விரிவான



விசாரணையை உடனடியாக முன்னெடுக்க வேண்டும். நீதித்துறையின் சுயாதீனத்தையும், நன்மதிப்பையும் உறுதிப்படுத்துவதற்காக இந்தச் செயற்பாடு மிகவும் அவசியமானது என்றும் சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் கூறியுள்ளார்.

குற்றப்புலனாய்வுப் பிரிவு இந்த விடயத்தில் தாமதமின்றி நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என்று இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் எழுத்து மூலமான கோரிக்கையை அனுப்பி வைக்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில், தமிழர் தரப்பு என்ன நடவடிக்கை எடுக்கப் போகின்றது? குறிப்பாக தமிழ் மக்களின் பிரதிநிதிகளாகவுள்ள தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்ன செய்யப் போகின்றார்கள்?

இது நீதித்துறைக்கு ஏற்படுத்தப்பட்டிருக்கின்ற அதி உச்சமான ஓர் அச்சுறுத்தல் என தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும், ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார். "நாட்டின் சுயாதீனமான நிறுவனங்களிலே பிரதானமானது நீதித்துறை. நீதித்துறையை பாதுகாக்கின்ற போது நீதிபதிகளுக்கு அச்சுறுத்தல் மேற்கொள்ளப்படுவதை நாங்கள் கண்டிக்க வேண்டும். அதனைத் தடுக்க வேண்டும்" என்றும் சுமந்திரன் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ் நீதிபதிகள் தீர்ப்புகளை வழங்க முடியாத நிலையில், நாட்டின் சட்டவாக்க சபையான நாடாளுமன்றத்தை அனைத்து தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களும் புறக்கணிக்க வேண்டும் என ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பு கோரிக்கை ஒன்றை விடுத்துள்ளது.

இவ்வாறானதொரு புறக்கணிப்பு நடவடிக்கையை தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் முன்னெடுப்பார்களா? ஓர் அடையாளத்திற்கேனும் சில நாட்கள் அவ்வாறு மேற்கொண்டால் கூட அது ஒரு அழுத்தமான நடவடிக்கையாக இருக்கும். செய்வார்களா என்பதுதான் கேள்விக்குறி.

## கனடாவில்...

06ஆம் பக்கத்தொடர்ச்சி

பொதுவாக டிசெம்பர், ஜனவரி, பெப்ரவரி ஆதன வியாபாரத்தில் மந்த நிலையை நோக்கியே செல்லும். இந்த நிலைமை, இன்றைய அதிகவட்டி வீத சூழ்நிலையில் மேலும் அதிகரித்த பாதிப்பை ஏற்படுத்துவதனை தவிர்க்க முடியுமா?

புதிதாக சந்தைப்படுத்தப்படும், அதிகமான அடுக்குமனை அலகுகளின் வியாபாரமும் குறைவடைந்து வருவதனையும் காணக்கூடியதாக உள்ளது. இதேநிலைமை குறிப்பிட்ட காலத்திற்குத் தொடரும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இவையாவும் எதிர்கால பொருளாதார நிலைமையிலும் வட்டி வீத நிலைப்பாட்டிலுமே தங்கியுள்ளது.



விளம்பரம்
VLAMBARAM
33ஆவது ஆண்டில்
பதிப்பாளர்: ராஜா மகேந்திரன்
ஆசிரியர்: சத்தியா மகேந்திரன்
முகாமையாளர்: கமல் செல்லையா
ஊடகப் பொறுப்பாளர்: விஜய் செல்லையா
அலுவலக பொறுப்பாளர்: யசோதா குமாரகுலசிங்கம்
பதிப்பு: Canyon Press Inc.
'விளம்பரம் பப்ளிகேஷன்ஸ் இங்' நிறுவனத்தால் வெளியிடப்படும் 'விளம்பரம்' பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களும், விளம்பரங்களுக்கு விளம்பரதாரர்களுமே பொறுப்பாளர்கள். விளம்பரம் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ ஆசிரியரின் அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.
Vlambaram Publications Inc.
GTA SQUARE, 5215 FINCH AVE. E.,
#201, TORONTO, ON M1S 0C2, CANADA
TEL: 416-282-8059/ FAX: 416-286-0344
email:vlambaram@sympatico.ca
web: www.vlambaram.com
Vlambaram Publications Inc. 2020 All Rights Reserved


சந்திரமௌலீஸ்வர சிவாலயம்
தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்
ஆலயம் திறந்திருக்கும் நேரம்
வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில்: காலை 7am - மாலை 9pm
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm மாலை 5pm - 9pm
விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம். ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்
Tel: 416 . 754 . 7338 / 416 . 724 . 7480
3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough

# கனடா...

01ஆம் பக்கத்தொடர்ச்சி

அல்லது கனடாவையும் பிரதிநிதித்துவப் படுத்த மாட்டாது" எனக் கூறியிருந்தார்.

The Globe and Mail ஊடகம் தாங்கள் அடுத்த 24 மணித்தியாலத்தில் கனடியப் பாதுகாப்பு அமைப்புகளின் விசாரணை பற்றியும் அதில் இந்திய அரசாங்க முகவர்களுக்கும் நிஜ்ஜாரின் கொலைக்கும் தொடர்பு இருப்பது பற்றியும் செய்தி வெளியிடப்படும் என பிரதமர் அலுவலகத்திற்குத் தெரிவித்ததைத் தொடர்ந்தே ஜஸ்ரின்




ரூடோ செப்ரெம்பர் 18ஆம் திகதி நாடாளுமன்றத்தில், இந்திய அரசாங்கத்தின் முகவர்களுக்கும் கனடியக் குடிமகனான ஹர்தீப் சிங் நிஜ்ஜார் கொல்லப்பட்டதற்கும் தொடர்பு இருப்பதாக நம்பகரமான குற்றச்சாட்டுகள் உள்ளன என்றும் அதை கனடியப் பாதுகாப்பு அமைப்புகள் தீவிரமாக விசாரித்து வருகின்றன எனவும் தெரிவித்தார்.

இந்த அறிவிப்பைத் தொடர்ந்து CBC ஊடகம் வெளியிட்ட அறிக்கையில், நிஜ்ஜார் படுகொலை தொடர்பான விசாரணையில் சேகரிக்கப்பட்ட ஆதாரங்களில், "Five Eyes" எனப்படும் ஐந்து நாடுகளான கனடா, அமெரிக்கா, இங்கிலாந்து, அவுஸ்ரேலியா மற்றும் நியூசிலாந்து ஆகியவற்றின் கூட்டு உளவுத்துறையின் தகவல்களும், கனடாவில் உள்ள இந்தியத் தூதுவர்களுடைய தகவல் பரிமாற்றம் சம்பந்தப்பட்ட தகவல்களும் உள்ளன எனத் தெரிவித்துள்ளது.

கனடிய நாடாளுமன்றத்தில் ஜஸ்ரின் ரூடோ வெளியிட்ட அறிக்கையில் தற்போது நடைபெற்றுவரும் விசாரணையில் இந்திய அரசு பங்கேற்க வேண்டும் என்றும், இந்த விவகாரத்தை முடிவுக்குக் கொண்டுவர கனடாவுடன் ஒத்துழைக்க வேண்டும் எனவும் கேட்டிருந்தார். ஆனால், அவரது அறிக்கை வெளியான உடனேயே இந்திய வெளிவிவகார அமைச்சு ஜஸ்ரின் ரூடோவின் குற்றச்சாட்டுக்களை மறுத்ததுடன் அவற்றை சுத்த அபத்தம் (absurd) எனவும், ஆதாரமற்றவை எனவும் கூறி அறிக்கை வெளியிட்டுள்ளது.

கனடிய அரசு இந்தியத் தூதரக அதிகாரியான உளவுத் துறைக்குப் (RAW) பொறுப்பாக இருந்த பவன் குமார் ராய் என்பவரை கனடாவை விட்டு வெளியேற்றியது. இந்தியத் தூதரக அதிகாரியான உளவுத்துறையைச் சேர்ந்த (RAW) பவன் குமார் ராயை வெளியேற உத்தர விடும்போது கனடிய வெளிவிவகார அமைச்சர் Melani Joly, "எனது எதிர்பார்ப்பு இந்தியா இந்தக் கொலை விசாரணையில் பூரண ஒத்துழைப்பு வழங்கி இந்த விவகாரத்திற்கு ஒரு முடிவைக் கொண்டுவர ஒத்துழைக்கும்" என ஊடகங்களுக்குத் தெரிவித்தார்.

இதற்குப் பதில் நடவடிக்கையாக இந்திய அரசு கனடாவின் உயர் ஆணையாளரை வரவழைத்து அவரிடம் கனடியத் தூதரக அதிகாரியான உளவுத்துறையைச் சேர்ந்த Olivier Sylvestre என்பவரை ஐந்து நாட்களுக்குள் இந்தியாவை விட்டு வெளியேற்றுமாறு பணித்தது. கனடியத் தூதரக அதிகாரியான உளவுத் துறையைச் சேர்ந்த Oliver Sylvestreஇற்கு வெளியேற உத்தரவு இடும்போது இந்திய அரசு, "நமது உள்விவகாரங்களில் கனடியத் தூதர்களின் தலையீடு மற்றும் இந்தியாவிற்கு எதிரான நடவடிக்கைகளில் அவர்கள் ஈடுபடுவது குறித்து இந்திய அரசாங்கத்தின் அதிகரித்துவரும் கவலையை இந்த முடிவு பிரதிபலிக்கிறது" எனத் தெரிவித்தது.

இதன் பின்னர் இந்திய அரசு வெளியிட்ட ஒரு தனி அறிக்கையில், கனடிய அரசின் அர்த்தமற்ற குற்றச் சாட்டுகள் அரசியல் உள்நோக்கம் கொண்டவை. கனடாவில் தங்குமிடம் வழங்கப்பட்டு இந்தியாவை தொடர்ந்து அச்சுறுத்திவரும் காலிஸ்தான் பயங்கர வாதிகள் மற்றும் தீவிரவாதிகளின் நடவடிக்கைகள் குறித்து கனடிய அதிகாரிகள் கவனம் செலுத்து வதுமில்லை. அவர்கள் மீது நடவடிக்கைகள் எடுப்பதும் இல்லை. அவர்கள் இந்தியாவின் இறையாண்மைக்கும் பிராந்திய ஒருமைப்பாட்டிற்கும் அச்சுறுத்தலாக உள்ளனர்.



கனடிய அரசின் குற்றச்சாட்டுக்கள் ஒட்டாவாவில் அரசியல் கட்சிகளிடையே ஒற்றுமைக்கு ஓர் அரிய தருணத்தை ஏற்படுத்தியது. அனைத்துக் கட்சித் தலைவர்களும் இந்தக் கொலையை கண்டித்தனர். மத்திய அரசிடம் இருந்து தேசிய பாதுகாப்பு அமைப்பு களின் நம்பகமான தகவல்களையும் வெளியிடுமாறு கோரினர்.

இதேபோல் இந்தியாவிலும் இந்நிகழ்வு அரசியல் கட்சிகளிடையே ஒற்றுமைக்கு ஓர் அரிய தருணத்தை ஏற்படுத்தியது. அவர்கள் கனடாவின் குற்றச்சாட்டை அபத்தம் என்றும் ஆதார மற்றவை என்றும் ஒருமித்த குரலில் தெரிவித்தனர். இந்தியாவின் பிரதான எதிர்க் கட்சியான காங்கிரஸ் கட்சி நரேந்திர மோடி அரசின் நிலைப் பாட்டையே எதிரொலித்தது. அது தனது டுவிட்டர் பதிவில், இந்தியாவின் பயங்கரவாதத்திற்கு எதிரான போராட்டம் எந்த வித சமரசமற்றதாகவும் இருக்க வேண்டும் என வலியுறுத்தியது.

செப்ரெம்பர் 20ஆம் திகதி இந்திய அரசு தனது குடி மக்களுக்கு ஒரு பயண எச்சரிக்கையை விடுத்துள்ளது. அதில், "இந்தியாவிற்கு எதிரான வளர்ந்து வரும் நடவடிக்கைகள் மற்றும் அரசியல் ரீதியாக இந்தியர்கள் மீது காட்டப்படும் வெறுப்புகள் காரணமாக இந்தியக் குடிமக்கள் கனடாவிற்குள் பயணிக்கும்போது மிகவும் எச்சரிக்கையுடன் செயல்பட வேண்டும்" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. கனடாவின் பொது பாதுகாப்பு அமைச்சர் Dominic LeBlanc இந்தியாவின் இந்தப் பயண எச்சரிக்கையை நிராகரித்து கனடா ஒரு பாதுகாப்பான நாடு எனத் தெரிவித்துள்ளார்.

செப்ரெம்பர் 21ஆம் திகதியில் இருந்து கனடியக் குடி மக்களுக்கு இந்தியா செல்வதற்கு விசா (Visa) வழங்குவதை இந்தியா தற்காலிகமாக நிறுத்தி வைத்துள்ளது, கனடாவில் உள்ள இந்தியத் தூதரகங்கள் எதிர்கொள்ளும் பாதுகாப்பு அச்சுறுத்தலே இதற்குக் காரணம் என இந்திய அரசு தெரிவித்துள்ளது. ஏற்கனவே வழங்கப்பட்ட செல்லுபடியான விசாக்களை வைத்திருப்போருக்கு பயணம் செய்வதற்கு எந்த ஒரு தடையும் இல்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கனடாவின் சனத்தொகையில் 3.7% (1.4 மில்லியன்) ஆனோர் இந்தியர். அதாவது கனடாவில் இருக்கும் இந்தியர்களில் 57%ஆனோர் சீக்கியர். கனடாவில் தற்போது ஏற்பட்டுள்ள இந்திய அரசுடனான இராஜதந்திர முறுகலின்போது அமெரிக்காவில் உள்ள "சீக்கியர்களுக்கான நீதி" என்ற அமைப்பைச் சேர்ந்த Gurpatwant Singh Pannu என்பவர் வெளியிட்டுள்ள அறிக்கை கனடிய ஊடகங்களின் கவனத்தை ஈர்த்துள்ளது. அந்த அறிக்கையில் அவர் கனடாவில் உள்ள இந்துக்கள் எல்லோரும் நாட்டைவிட்டு வெளியேற வேண்டும் என்று கூறியிருந்தார்.

இந்த அறிக்கை தொடர்பாக ஜனநாயகக் கட்சியின் தலைவர் ஜக்மீத் சிங் சமூக ஊடகங்களில் வெளியிட்டுள்ள செய்தியில், "கனடா முழுவதும் உள்ள இந்துக்களுக்கு இது உங்கள் வீடு. நீங்கள் இங்கு இருக்கத் தகுதியானவர்கள்" எனக் குறிப்பிட்டுள்ளார்.

கனடாவின் அவரசகால தயார்நிலை அமைச்சரான Harjit Sajjan, "இந்துக் கனடியர்கள் மற்றும் அனைத்துப் பின்னணியில் இருந்து வந்த இந்தியர்கள் அனைவரையும் கனடாவில் பாதுகாப்பாக இருக்கத் தகுதியற்றவர்கள் என்று கூறும் எவரும் கனடியர்களாகிய நாம் விரும்பும் சுதந்திரம் மற்றும் மனிதாபிமானத்தையும் ஏற்றுக் கொண்டவர்கள் அல்ல" எனத் தெரிவித்துள்ளார்.

2023 செப்ரெம்பர் 26ஆம் திகதி நியூயோர்க்கில் நடந்த "வெளிநாட்டு உறவுகள் சபை" (Council on Foreign Relations) நிகழ்வில் கனடிய அரசின் குற்றச்சாட்டுகள் பற்றி ஊடகவியலாளர் இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் சுப்ரமணியம் ஜெய்சங்கரிடம் கேள்வி கேட்டபோது அவர் அளித்த பதிலில், "முதலாவதாக இவ்வாறு நடப்பது இந்திய அரசின் கொள்கையல்ல என்று நாங்கள் கனடியப் பிரதிநிதிகளிடம் கூறினோம். இரண்டாவதாக உங்களிடம் எந்தவிதமான "குறிப்பிட்ட" (specific) ஆதாரம் அல்லது அது "சம்பந்தமான" (relevant) ஏதாவது பொருத்தமான தகவல் இருந்தால் எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள். நாங்கள் அதைப்பார்க்கத் தயாராக இருக்கிறோம் என்றும் கனடியப்பிரதிநிதிகளிடம் கூறினோம்" என்றார்.

இந்தியா கடந்த வாரம் கனடியர்களுக்கான புதிய விசா வழங்குதலை நிறுத்தியது. கனடாவில் பாதுகாப்புச் சூழல் மோசமடைந்து வருகிறது மற்றும் கனடிய அரசை அதன் இராஜதந்திரிகளின் எண்ணிக்கையை இந்தியாவில்

(தொடர்ச்சி 07ஆம் பக்கம்...)



## நாமும் நமது இல்லமும் 639

# கனடாவில் வட்டி வீதத்தின் பாதிப்பு



ராஜா மகேந்திரன், P.Eng.
raja@mahendran.ca
416.315.9397/416.321.6969

செப்ரெம்பர் 06, 2023இல் கனடிய மத்திய வங்கியின் வட்டி வீதம் சம்பந்தமான நடுநிலையான முடிவு, எந்த திசையில் எதிர்காலத்தில் வட்டி வீதம் செல்ல இருக்கும் என்பதற்கு முடிவு இல்லாமல் இருக்கின்றது. இந்த மாதம் 25ஆம் திகதி (ஒக்ரோபர் 25, 2023) சந்திக்க இருக்கும் மத்திய வங்கியின் குழு, வட்டி வீதத்தை அதிகரிக்குமா அல்லது இவ்வாறே 5%இல் மாற்றாமல் விடுமா என்பதனைப் பொறுத்தே எதிர்கால ஆதன வியாபாரம் பெரிய பங்கினை எடுக்கும்.

ஏற்கனவே ஆதன வியாபாரத்தில் ஏற்பட்டு இருக்கும், வியாபார இழப்பு மேலும் வட்டி வீத அதிகரிப்பு ஏற்பட்டால் கனடியர்களின் மாதாந்தக் கொடுப்பனவில் மிகப்பெரிய நெருக்கடியை ஏற்படுத்தும் என்பதனை எதிர்வு கூறக் கூடியதாக உள்ளது. இந்த வருட இளவேனிற்காலத்தில் (spring 2023) கனடிய மத்திய வங்கியின் வட்டி வீத அதிகரிப்பினை ஏற்படுத்தி நடுநிலைமை ஆதன வியாபாரத்தை அதிகரிக்க வைத்தது. இதனைத் தொடர்ந்து மத்திய வங்கி தொடர்ந்து வட்டி வீதத்தை அதிகரித்திருந்தது.

அதன் பிற்பாடு வியாபாரம் கீழ் இறங்கத் தொடங்கியது. எனவே நிலையான முடிவு கிடைக்கும்வரை ஆதன வியாபாரம் மந்த நிலையிலேயே இருக்கும் என எதிர் பார்க்கலாம். ஒருவராலும் ஆதன வியாபாரம் பற்றி தகுந்த முறையில் கூற முடியாமல் உள்ளது. எனினும், ஏற்கனவே ஏற்படுத்திய வட்டி வீத அதிகரிப்புகளின் பொருளாதாரம் மீதான தாக்கங்கள் எதிர் காலத்தில்தான் முற்றாகத் தெரியவரும். ஏற்கனவே புதிதாக வாங்கி (கொள்வனவு செய்து), அண்மையில் திறப்புகளை (சாவிகளை) பெற்ற அடுக்குமாடி மனை உரிமையாளர்களின் நிலை மிகவும் நெருக்கடியில் உள்ளது.

இன்னும் ஒரு மேலதிக வட்டி வீத அதிகரிப்பு கனடியர்களால் தாங்க முடியுமா?

பொதுவாக 1 மில்லியனிற்கு மேற்பட்ட ஆதனங்கள் வாங்கும்போது, அடமானக் கடன் பெறுவதில் மிகப்பெரிய இறுக்கமான நிலைப்பாடு ஏற்பட்டுள்ளது.



மேலும், வட்டி வீதம் அதிகரிப்பு ஏற்பட்டால் இந்நிலைமை மேலும் இறுக்கமாகும். அத்துடன் செப்ரெம்பர் 06, 2023இல் ரொறொன்ரோ நகரசபை ஆதன மாற்று வரியை 3 மில்லியனிற்கு மேற்பட்ட வீடுகளிற்கு மேலும் அதிகரித்துள்ளது. இதனால், விலை அதிகரித்த வீடுகளின் வியாபாரமும் மந்த நிலையை நோக்கி செல்லலாம்.

ஜனவரி 01, 2024இல் இருந்து புதிய ஆதன மாற்றுவரி, $3 மில்லியனிற்கும், 4 மில்லியனிற்கும் இடைப்பட்ட ஆதனத்திற்கு 3%இலிருந்து 3.5%இற்கும், $4 மில்லியனிற்கும் $5 மில்லியனிற்கும் இடைப்பட்ட ஆதனத்திற்கு 4.5% ஆகவும் $5 மில்லியனிற்கு $10 மில்லியனிற்கு இடைப்பட்ட ஆதனத்திற்கு 5.5%ஆகவும், $10 மில்லியனிற்கும் $20 மில்லியன்வரை உள்ளவற்றிற்கு 6.5%ஆகவும், $20 மில்லியனிற்கும் அதிகமான ஆதனத்திற்கு 7.5% ஆகவும் இருக்கும் என அதிகரிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் நகரசபை பிதாவாக தெரிவு செய்யப்பட்ட Olivia Chowஇனால் இந்த புதிய வரி மாற்றம் கொண்டுவரப்பட்டது. உதாரணமாக, 2023 ஒகஸ்ற் இவ் வியாபாரம் ஒகஸ்ற் 2022உடன் ஒப்பிடும் போது ஆதன வியாபாரம் 5.2%இனால் குறைந்துள்ளது.

மேலும் இதேகால ஒப்பீட்டில் சந்தைப் படுத்தப்பட்ட ஆதனங்கள் 16.5%இனால், அதிகரித்துள்ளது. தம்மால், மாதாந்தக் கொடுப்பனவு செய்ய முடியாதவர்கள், தமது இருப்பிடத்தை விற்பதனை தவிர வேறு வழிகள் இல்லாததனை காணக் கூடியதாக உள்ளது.

(தொடர்ச்சி 04ஆம் பக்கம்...)




Condo for Sale

Tridel Unit
1 Bedroom + Den Condo for Sale
Kennedy & Highway 401
Den Can be used as Bedroom 24 hours Security
Easy Access to Mall, Universities, Colleges, Highway etc...
Available anytime.

For more info. Please Call....
GEORGE PARANTHAMAN
416.277.9044





# கனடா மீதான இலங்கை அமைச்சரின் ஆத்திரம்!

- விகிர்தன் -

கனடாவிற்கும் இந்தியாவிற்கும் இடையில் ஏற்பட்ட கடுமையாக விரிசல் நிலை ஒரு சுமுகமான முடிவிற்கு வரும் என்கின்ற நம்பிக்கை தற்போது ஏற்பட்டுள்ளது. கனடியப் பிரதமர் ஜஸ்ரின் ரூடோ அண்மையில் தெரிவித்திருக்கும் கருத்துகள் இந்த நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது.

இந்தியாவுடன் நெருங்கிய உறவை ஏற்படுத்த கனடா உறுதிபூண்டுள்ளதாக கனடியப் பிரதமர் ஜஸ்ரின் ரூடோ தெரிவித்துள்ளார்.

மொன்றியல் நகரில் ஊடகவியலாளர்களிடம் ஜஸ்ரின் ரூடோ கூறுகையில், “வளர்ந்து வரும் பொருளாதார நாடாக இந்தியா உள்ளது. புவிசார் அரசியலில் முக்கிய பங்கு வகிக்கின்றது. இந்தோ பசுபிக் பிராந்திய ஒத்துழைப்பின் படி, இந்தியாவுடன் நெருங்கிய உறவை ஏற்படுத்த முக்கியத்துவம் அளித்து வருகின்றோம்.

உலக அரங்கில் வளர்ந்து வரும் இந்தியாவின் முக்கியத்துவத்தை கருத்தில் கொண்டு, அந்நாட்டுடன், ஆக்கப்பூர்வமான உறவில் கனடாவும், அதன் நட்பு நாடுகளும் ஈடுபடுவது முக்கியமானது” எனத் தெரிவித்துள்ளார்.

இரு ஜனநாயக நாடுகள் மத்தியில் ஏற்பட்ட மோதல் நிலை முடிவிற்கு வர வேண்டும் என்பது ஜனநாயகத்தை நேசிக்கும் பல நாடுகளின் விருப்பமாக உள்ளது.

குறிப்பாக, ஈழத்தமிழர் அதிகளவில் புலம்பெயர்ந்து வாழும் நாடாக கனடா இருப்பதாலும், இந்தியா தமிழர்களின் பிரச்சினைகளில் ஆர்வம் காட்டும் அயல் நாடாக இருப்பதாலும் இரு நாடுகளும் சுமுகமான உறவிற்கு வரவேண்டும் என்கின்ற விருப்பம் தமிழ் மக்கள் மத்தியில் உள்ளது.இந்த விவகாரத்தில் கனடாவிற்கு எதிராக- குறிப்பாக, கனடியப் பிரதமருக்கு எதிராக மோசமான கருத்துகளை தெரிவித்து வரும் இலங்கை அமைச்சர் தொடர்பில் இங்கு குறிப்பிட வேண்டும்.

நியூயோர்க்கில் வைத்து இந்திய ஊடகம் ஒன்றிற்கு கருத்து தெரிவித்துள்ள இலங்கை வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி கனடா பயங்கரவாதிகளின் புகலிடமாக மாறியுள்ளது என்றும், உறுதியான ஆதாரங்கள் இன்றி இந்தியாவிற்கு எதிரான குற்றச்சாட்டுகளை கனடியப் பிரதமர் முன்வைத்துள்ளதாகவும் தெரிவித்து, கனடியப் பிரதமரை கடுமையாக சாடியுள்ளார்.

கனடியப் பிரதமர் ஜஸ்ரின் ரூடோ ஆதாரமற்ற பரபரப்பு குற்றச்சாட்டுகளை முன்வைப்பவர் என்பதால் அவரது தற்போதைய கருத்துகள் தனக்கு ஆச்சரியமளிக்கவில்லை என அலி சப்ரி தெரிவித்துள்ளார். சில பயங்கரவாதிகள் கனடாவில் அடைக்கலம் பெற்றுள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கனடியப் பிரதமர் இலங்கையில் இனப்படுகொலை இடம்பெற்றதாக பெரும் பொய்யை கூறினார். இலங்கையில் இனப்படுகொலை இடம்பெறவில்லை என்பது அனைவருக்கும் தெரியும் எனவும் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.
கனடாவில் காலிஸ்தான் தீவிரவாதி ஒருவர் கொல்லப்பட்டமையின் பின்னணியில்



இந்திய அரசாங்கம் உள்ளது என்ற கனடியப் பிரதமரின் குற்றச்சாட்டினால் இந்தியாவிற்கும் கனடாவிற்கும் இடையில் இராஜதந்திர முறுகல் நிலை உருவாகியுள்ள நிலையிலேயே இலங்கை வெளிவிவகார அமைச்சர் இவ்வாறு கருத்து தெரிவித்திருந்தார்.

இலங்கையில் இடம்பெற்றது இனப்படுகொலை என்று கனடியப் பிரதமர் கூறியதாலேயே அமைச்சர் அலி சப்ரிக்கு கனடியப் பிரதமர் மீது இவ்வளவு கோபம் ஏற்பட்டுள்ளது. இந்த விவகாரம் தொடர்பில் விசாரணைகள் நடைபெற்று வரும் நிலையில், எவ்வித ராஜதந்திரமும் அற்ற நிலையில், அமைச்சர் அலி சப்ரி கருத்து தெரிவித்துள்ளமை கடும் விமர்சனத்திற்கு உள்ளாகியுள்ளது.

இலங்கை வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி ஏன் இலங்கையை இந்தியா- கனடா மோதலிற்குள் இழுக்கின்றார்? என இலங்கை ஊடகமான டெய்லிமிரர் கேள்வி எழுப்பியுள்ளது.

இலங்கையில் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்து நாடு அரசியல் நெருக்கடியில் சிக்கித் தவிக்கும் வேளையில் இலங்கையின் அரச தலைவர்கள், சர்வதேச சமூகம் உதவ வேண்டும் என வேண்டுகோள் விடுக்கின்றனர்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தாங்கள் அனைத்து நாடுகளுடனும் நல்லுறவை பேண விரும்புவதாகவும், பக்கம் சாய விரும்பவில்லை எனவும் தெரிவித்துவரும் வேளையில், இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் இலங்கைக்கு தொடர்பற்ற இந்திய - கனடா முறுகல் நிலை குறித்து சர்வதேச ஊடகத்திற்கு கருத்து தெரிவித்துள்ளமை ஆச்சரிய மளித்துள்ளதாக அந்த ஊடகம் குறிப்பிட்டுள்ளது.

அலிசப்ரி இந்தியாவிற்கு எதிரான கனடியப் பிரதமரின் கருத்திற்காக கனடா பிரதமருக்கு எதிராக கடும் தாக்குதலை மேற்கொண்டுள்ளார். இது இலங்கைக்கு தொடர்பற்ற விடயம். இந்திய, கனடா விவகாரங்களில் இந்த தருணத்தில் தலையிடுவது அர்த்தமற்றது. மேலும் இலங்கைக்கு தொடர்பற்ற விடயத்தில் தலையிட்டு உறவுகளை மேலும் சீர்குலைப்பது போலவும் தோன்றுகின்றது எனவும் அந்த ஊடகம் மேலும் தெரிவித்துள்ளது.

இலங்கை தான் தீர்வுகாண வேண்டிய சொந்த மோதல்கள் பல உள்ளன. தனக்கு தேவையற்ற சம்பந்தமில்லாத மோதலில்களில் தலையிடாமல் இலங்கை அதனை செய்யலாம் என்றும் குறித்த ஊடகம் சுட்டிக்காட்டியுள்ளது.

இதே வேளை, இந்தியா-கனடா விவகாரத்தில், இலங்கை இந்தியாவிற்கு ஆதரவளிக்கின்றது என இந்தியாவிற்கான இலங்கை உயர்ஸ்தானிகர் மிலிந்த மொரகொட தெரிவித்துள்ளார். இந்திய ஊடகம் ஒன்று இந்த தகவலை வெளியிட்டுள்ளது. இதுவும் ஒரு ராஜதந்திர நிலைப்பாடற்ற கருத்தாகவே அமைந்துள்ளது.

இலங்கை பிரதமர் தற்போது வெளிநாட்டு பயணங்களில் ஈடுபட்டு வரும் நிலையில், அவர் நாடு திரும்பியதும் இது தொடர்பில் என்ன நடவடிக்கை எடுப்பார் என்பது தெரியவரும்.

## கனடா...

05ஆம் பக்கத்தொடர்ச்சி

குறைக்கு மாறு கூறியது பற்றிக் கேட்டபோது, அவர் அளித்த பதிலில், “பல குற்றவாளிகளைக் கொண்ட குழுக்கள், நிஜ்ஜார் போன்ற ஏராளமான பிரிவினைவாதிகள் கனடாவில் தங்கியிருக்கிறார்கள். இவ்வாறான குற்றவாளிகளை நாடு கடத்துமாறு பலமுறை இந்தியா கனடாவைக் கேட்டு நச்சரித்துக் கொண்டிருந்தும், கனடா பாராமுகமாக இருக்கிறது. உங்களுக்கு நன்றாகத் தெரியும், கடந்த சில ஆண்டுகளாகக் கனடாவில் திட்டமிட்டப் பட்ட குற்றவாளிகளைக் கொண்ட குழுக்கள் இயங்குகின்றன. பிரிவினைவாத சக்திகள் உள்ளன, வன்முறைகள் மற்றும் தீவிரவாதம் மிகவும் ஆழமாக ஊடுருவி உள்ளது. இவையே கனடாவில் பாதுகாப்புச்சூழல் மிகவும் மோசமடைந்து வருகிறது என நாங்கள் கூறியதற்கான காரணம்” என்றார்.

இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கர் இப்போது அமெரிக்காவில் இருக்கிறார். அங்கே அவர் அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சர் அன்ரனி பிளிங்கன் (Antony Blinken)ஐ சந்தித்துப் பேசினார். பல விஷயங்கள் குறித்து இரு தலைவர்களும் ஆலோசித்ததாகத் தெரிகிறது.

ஹர்தீப் சிங் நிஜ்ஜார் கொலை குறித்து அமெரிக்க வெளியுறவு அமைச்சர் அன்ரனி பிளிங்கன் கூறுகையில், “கனடாப் பிரதமர் ரூடோ எழுப்பிய குற்றச்சாட்டுகள் குறித்து நாங்கள் ஆழ்ந்த கவலை கொண்டுள்ளோம். இந்த விவகாரம் குறித்து கனடாவுடன் ஆலோசனை நடத்தி வருகிறோம். எங்களுக்குக் கனடாவின் விசாரணை முக்கியமானது. அதேநேரம் இந்த விவகாரம் குறித்து இந்திய அரசுடன் தொடர்ந்து பேசி வருகிறோம். விசாரணைக்கு ஒத்துழைக்குமாறு அவர்களை வலியுறுத்துகிறோம். அவர்கள் ஒத்துழைக்க வேண்டும் என்று வரும் காலத்திலும் நிச்சயம் தொடர்ந்து வலியுறுத்துவோம். இதில் இந்தியாவும் கனடாவும் இணைந்து செயல்பட வேண்டும் என்பதே எங்கள் விருப்பம். இதற்கு யார் பொறுப்பு என்பதைக் கண்டறிய வேண்டியது முக்கியம்” என்று கூறியிருந்தார் என Washington Post செப்ரெம்பர் 29இல் செய்தி வெளியிட்டுள்ளது.



ஹர்தீப் சிங் நிஜ்ஜார் கொலை குறித்து வங்கதேச வெளியுறவுத் துறை அமைச்சர் ஏகே அப்துல் மொமன் ஆங்கில செய்தி நிறுவனம் ஒன்றுக்கு அளித்த பேட்டியில், “கனடா இப்போது அனைத்து கொலைகாரர்களின் புகலிடமாக மாறிவிட்டது. கொலையாளிகள் கனடாவுக்குச் சென்று தஞ்சம் அடையலாம். அங்கு அவர்களுக்கு அற்புதமான வாழ்க்கை கிடைக்கும் என்பதே இப்போது நிலைமையாக இருக்கிறது. ஆனால், அந்தக் கொலையாளிகளால் இங்கே பல குடும்பங்கள் துயரத்தில் உள்ளன.

மனித உரிமைகள் என்பது பல நேரங்களில் பலரால் துஷ்பிரயோகம் செய்யப்படுகிறது. இது உண்மையில் துரதிர்ஷ்டவசமானது.. ஏனெனில் இது சில சமயங்களில் கொலையாளிகள், பயங்கரவாதிகளைப் பாதுகாக்க இந்த மனித உரிமை என்ற வார்த்தையே போதும் என்ற நிலை இருக்கிறது” என்றும் அவர் தெரிவித்தார்.

கனடா மரண தண்டனைக்கு எதிரான ஒரு நிலைப்பாட்டை எடுத்துள்ளது. வங்கதேச அதிபரான ஷேக் முஜிபுர் ரஹ்மானை கொலை செய்தது என்று குற்றம் சாட்டப் பட்ட நூர் சவுத்ரிக்கு வங்கதேசத்தில் மரண தண்டனை விதிக்கப்படலாம் எனக் கூறப் படுகிறது. இதன் காரணமாகவே கனடா, நூர் சவுத்ரியை நாடு கடத்த சம்மதிக்க வில்லை என்பது குறிப்பிடத்தக்கது.



# நானிலம் போற்றும் நட்பு - 30



- அகணி -
authorakani@gmail.com

"விழையார் விழையப் படுப பழையார்கண்
பண்பின் தலைப்பிரியா தார்."(அதிகாரம் பழமை, குறள் 810) என்ற குறளிற்கு "தவறு செய்த போதிலும் பழகிய நண்பரிடத்தில் தம் உரிமை பண்பிலிருந்து மாறாதவர், தம் பகைவராலும் விரும்பப்படுதற்குரிய சிறப்பை அடைவர்." என்று உரையாசிரியர் மு.வரதராசனார் அவர்கள் உரை தந்துள்ளார்.

"பழைய நண்பர்களிடம் கொண்ட நட்பினை விட்டு விடாதவர், பகைவராலும் விரும்பப்படுவார்." என்று உரையாசிரியர் அருள்திரு திருக்குறள் மாமுனிவர் முனைவர் கு. மோகனராசு அவர்கள் உரை தந்துள்ளார்.

"பழைய சினேகிதரின் நட்பை விடாதவர் விரோதிகளாலும் விரும்பப்படுவர்" என்று உரையாசிரியர் சாமி சிதம்பரனார் அவர்கள் உரை தந்துள்ளார்."

பழைய நட்பை விட்டு விடாதவர் பகைவராலும் விரும்பப்படுவார் என்று இந்தக் குறளில் அறிவுரை கூறப்பட்டுள்ளது.

நட்பின் பெருமை பற்றி குறுந்தொகையில் வரும் பாடல் சிலவற்றையும் கடந்த இதழில் உரையாடினோம்.

இப்பொழுது குறுந்தொகையில் வரும் ஒன்பதாவது பாடலைக் கவனிப்போம். இந்தப் பாடலை கயமனார் என்னும் புலவர் பாடியுள்ளார். பாட்டு - தோழி சொல்வது போலப் பாடப்பட்டது. நெய்தல் திணைக்குரிய பாடல் இது.

நெய்தல் நிலத்துத் தலைவன் ஒருவன், தன் மனைவியை விட்டுப் பிரிந்து பரத்தையின் வீட்டிலே தங்கியிருந்தான். தன் மனைவி பூப்படைந்திருக்கும் போதும் பிள்ளை பெற்றிருக்கும் போதும் பரத்தையர் வீட்டிற்குச் செல்வது பண்டைக்கால ஆண்கள் வழக்கம். செல்வமுள்ள குடியினரிடம் இவ்வழக்கம் இருந்தது. இவ்வழக்கத்தை ஒட்டியே இந்தத் தலைவன் பரத்தையர் வீட்டில் தங்கியிருந்து திரும்பினான்.

தன் செய்கைக்குத் தன் மனைவி வருந்துவாள், சினப்பாள், தன்னை அன்புடன் வரவேற்க மாட்டாள் என்பது அவனுக்குத் தெரியும். ஆதலால் அவன் தோழியின் தயவால், தலைவியின் ஊடலைத் தணித்துத் தனக்கும் அவளுக்கும் இணைப்பை உண்டாக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டான். இவ்வாறு தனக்குத் தூது வாயிலாக உதவுமாறு தோழியை வேண்டிக் கொண்டான்.

இப்படி வேண்டிக் கொண்ட தலைவனுக்கு அத்தோழி கூறுவதாக இந்தப் பாடல் அமைந்துள்ளது.

"யாய் ஆகியளே! மாஅ யோளே!
மடைமாண் செப்பில் தமிய வைஇய
பெய்யாப் பூவின் மெய் சாயினளே!
பாசடை நிவந்த கணைக்கால் நெய்தல்
இனமீன் இருங்கழி ஓதம் மல்குதொறும்
கயம்மூழ்கும் மகளிர் கண்ணின் மானும்
தண் அம் துறைவன் கொடுமை
நம்முன் நாணிக் காப்பு ஆடும்மே."

இந்தப் பாட்டின் பொருளினைக் கவனிப்போம். "தலைவனே, நம் தலைவி இயல்பாகவே மாந்தளிர் போன்ற நிறமுள்ளவள். நீ பரத்தையரை நாடிச் சென்றதனால், அவள் தாங்க முடியாத துன்பமுற்றாள். அவள் அடைந்த சோர்வே இதற்குச் சான்று. நன்றாக காற்றுப் போக இடமின்றி அடைக்கப்பட்ட குடத்துள்ளே ஒருவராலும் சூடப்படாமல் தனித்துக் கிடக்கும் மலர்கள் வாடி வதங்கிப் போய்விடும். அது போலத் தலைவியும் தன் உடல் மெலிந்தாள், அவள் மேனியின் அழகு குன்றினாள்.

"திரண்ட காம்புகளையுடைய நெய்தல் மலர்கள் பசுமையான இலைகளுக்கு மேல் உயர்ந்து காணப்படுகின்றன. மிகுந்த மீன்களும் வாழ்கின்றன. இந்தப் பெரிய நீர்ச் சுழியிலே வெள்ளம் பெருகும் போதெல்லாம் நெய்தல் மலர்கள் வெள்ளத்திலே மூழ்கி மூழ்கி எழுந்திருக்கின்றன. இத்தோற்றம் குளங்களிலே முழுகி விளையாடும் பெண்களின் கண்களைப்போல் காட்சியளிக்கின்றது. இத்தகைய குளிர்ந்த நீர்த் துறையையுடைய தலைவன் செய்த கொடுமையைத் தன்னுள்ளேயே மறைத்துக் கொண்டிருக்கின்றாள். வெளியிற் சொல்ல மாட்டாள்.

பரத்தை வீட்டுக்குப் பிரிந்து சென்றதனால் நீ அவளுக்குச் செய்த கொடுமையை நம் முன்னே சொல்வதற்கு நாணம் அடைகின்றாள். அக்கொடுமையை உணர்த்தும் மொழிகளைச் சொல்லாமல் மறைத்து வேறு சொற்களைச் சொல்லுகின்றாள். ஆதலால் அவள் எம் அன்னைபோல் சிறந்து நிற்கின்றாள்: கற்பையே தனது கடமையாகக் கொண்டு நிற்கின்றாள். நீ அஞ்ச வேண்டாம். அவள் உன் குற்றத்தை மறந்து உன்னை அன்புடன் ஏற்றுக்கொள்வாள்."

தோழியானவள் தலைவனுக்கு, தலைவன் கொடுமையைத் தலைவி மறந்து அவனை ஏற்றுக் கொள்வாள். இத்தகைய சிறந்த கற்புடையவள் தலைவி என்ற செய்தியை தலைவனுக்குத் தோழி கூறுகிறாள்.

இப்பாடலில் இரண்டு உவமைகள் வந்தன. தலைவியின் உடம்பு மெலிந்ததற்கு மூடப்பட்ட குடத்துள் தனியே வாடியிருக்கும் மலர் உவமை.

நீரிலே முழுகியெழும் பெண்களின் கண்களுக்கு வெள்ளத்தில் மூழ்கி எழும் நெய்தல் மலர்கள் உவமை. இவ்விரண்டு உவமைகளும் மிகவும் சிறப்பாக உள்ளன. தோழியின் பேச்சு நட்பின் பெருமையை எடுத்துக் காட்டுகிறது.

இப்பொழுது குறுந்தொகையில் வரும் பத்தாவது பாடலைக் கவனிப்போம்.

இப்பாடலின் ஆசிரியர் ஓரம்போகியார். பரத்தை வீட்டிலிருந்து வந்த தலைமகனுக்குத் தோழி தூது செல்ல இணங்கினாள். இது மருதத்திணைக்குரிய பாடல்.

"யாய் ஆகியளே விழவு முதலாட்டி
பயிறுபோல் இணர பைம்தாது படீஇயர்
உழவர் வாங்கிய கமழ்பூ மென்சினைக்
காஞ்சி ஊரன் கொடுமை
கரந்தனள் ஆகலின் நாணிய வருமே."




பரத்தை வீட்டிற்குச் சென்ற தலைவன் திரும்பி வந்தான். தன் காதலியின் தோழியைக் கண்டான். என்மீது தலைவி கொண்டிருக்கும் கோபத்தைத் தணிக்க வேண்டும் என்று வேண்டிக் கொண்டான். "நீ தலைவிக்கு மிகவும் கொடுமை செய்து விட்டாய்! அவள் உயர்ந்த கற்பொழுக்கமுள்ளவள். ஆதலால் உன் கொடுமையை அவள் பொருட் படுத்தவில்லை. அவளே உன்னை வரவேற்க வருகின்றாள் பார்" என்று கூறினாள். இவ்வாறு தோழி உரைப்பதைச் சொல்வதே இந்தப் பாடலாகும்.

இப்பொழுது இந்தப் பாடலின் பொருளினைக் கவனிப்போம்.

"தலைவனுடைய சிறப்புக்கு என் தலைவிதான் காரணம். என் தலைவியைக் கைப்பிடித்த பின்பே அவன் எல்லாச் செல்வங்களையும் பெற்றான். காஞ்சி மரத்தின் மெல்லிய கிளைகளிலே நறுமணம் வீசும் மலர்கள் பூத்திருக்கின்றன. உழவர்கள் அந்தக் காஞ்சி மரத்தின் கிளையை வளைத்து மலர்களைப் பறிக்கின்றனர். அவர்கள் பறிக்கும் பயறுபோன்ற மலர்க் கொத்துக்களிலே பசுமையான மகரந்தங்கள் இருக்கின்றன. அம்மகரந்தங்கள் அவ்வுழவர்களின் மேல் படிந்து கிடக்கின்றன. இத்தகைய உழவர்கள் வாழும் ஊரையுடையவன் தலைவன்.

இவன் தலைவியைப் பிரிந்து பரத்தையர் வீட்டிற்குச் சென்றான். இப்பொழுது திரும்பி வருகின்றான். இவன் உடம்பிலே பரத்தையர் தெளித்த சந்தனம் முதலியவை காணப்படுகின்றன.

தலைவன் இப்படிக் கொடுமை செய்தவன் ஆயினும் கற்பிற் சிறந்த தலைவி அவன் கொடுமையைத் தன் உள்ளத்திலேயே மறைத்துக் கொண்டாள். தலைவன் வெட்க மடையும்படி அவனை வரவேற்க அவளே முன்வருகின்றாள். துன்பம் செய்தவர்க்கும்

(தொடர்ச்சி 10ஆம் பக்கம்...)



# துக்க வீடுகளில் அத்துமீறும் தமிழக ஊடகங்கள்: அதிர்ச்சியடைந்த திரையுலகம்!

**கண்ணன்**

தமிழ் திரைப்பட இசையமைப்பாளரும் நடிகருமான விஜய் ஆண்டனியின் மகள் மீரா, அண்மையில் தற்கொலை செய்துக் கொண்டார். இச்சம்பவம், உலகம் முழுவதும் தமிழர்களிடையே பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. இதனிடையே, துக்க வீட்டில் தமிழக தொலைக்காட்சி நிறுவனங்களும் யூடியூப் சேனல்களும் நடந்துகொண்ட விதம் சர்ச்சைக்கு உள்ளாகியுள்ளது. இதனையடுத்து, துக்க வீடுகளில் ஊடகக்காரர்களை தடை செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை தமிழ் சினிமாக்காரர்கள் வைத்துள்ளனர்.

**என்ன நடந்தது? திரைத்துறையினரும் ஊடகர்களும் என்ன சொல்கிறார்கள்?**

திரைத்துறையினரோ அரசியல் பிரபலங்களோ மரணமடையும்போது அத் துக்க நிகழ்வை நேரடி ஒளிபரப்பு செய்வதும் மரணமடைந்தவர்கள் குறித்த மற்றவர்கள் இரங்கலைப் பெற்று வெளியிடுவதும் ஊடகங்களின் வழக்கம். இதனடிப்படையில், விஜய் ஆண்டனியின் மகள் மீரா விஜய் ஆண்டனி கடந்த 19-09-2023 அன்று தற்கொலை செய்து கொண்ட போதும், வழக்கம்போல் அவரது வீட்டில் பெரும்பாலான ஊடகங்களின் கேமிராக்கள் குவிந்தன. பிரபலங்கள் மீரா குறித்துப் பகிர்ந்துகொண்டதை மட்டுமல்லாமல், விஜய் ஆண்டனி



குடும்பத்திற்கும் தங்களது ஆறுதலைப் பகிர்ந்துகொண்டனர்.

இதுவரைக்கும் பிரச்சினையில்லை. அதன் பிறகே விஷயம் கைமீறி, நாகரிக வரம்பை மீறியது. சில ஊடகங்கள் துக்க வீட்டிற்கு வந்த மீராவின் ஆசிரியர்கள் சிலரிடம் கட்டாயப்படுத்தி கருத்துகளைக் கேட்டனர். இது பார்ப்பவர்களை முகம் சுழிக்க வைக்கும் விதமாக அமைந்ததாகக் கண்டனங்கள் எழுந்தன. ஆனால், இதுபோன்ற வீடியோக்களே அதிக பார்வைகளைப் பெற்றன என்பது குறிப்பிடத்தக்கது. எனவே, தொலைக் காட்சி நிறுவனங்களும் யூடியூப் சேனல்களும் கல்லறை வரைக்கும் அவர்களைப் பின்தொடர்ந்து வீடியோக்களைப் பதிவு செய்து வெளியிட்டனர்.

இதுதான் இப்போது கண்டனத்துக்கு உள்ளாகியுள்ளது. குறிப்பாக, துக்கத்தில் இருப்பவர்கள் உணர்வுகளுக்கு மதிப்பளிக்காமல் ஊடகங்கள் நடந்துகொண்டதாகப் பலரும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

முதன்முதலில் இது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த ‘மாநாடு’ படத்தின் தயாரிப்பாளரான சுரேஷ் காமாட்சி, ‘மரண வீட்டில் கூட காமிரா வைத்து காசு பார்க்க ஒரு கூட்டம் வந்துவிட்டது. மீடியா என்ற பெயரில் சிலரும்; மீடியா இல்லாமல் செல்போனைத் தூக்கிக் கொண்டு படம் பிடிக்கும் பலரும் பெருகிவிட்டார்கள். நமது இழப்பு அவர்களுக்கு லைக்கும் காசும். நமது துக்கத்தை அவர்களது துக்கமாகப் பார்க்கத் தவறுகின்றர். துக்க வீட்டிலாவது இனி காமிரா அனுமதியில்லை என்ற முடிவெடுக்க வேண்டும். நம் வீட்டில் நாம் யாரை அனுமதிக்க வேண்டும், கூடாது என்ற முடிவையாவது அனைவரும் இணைந்து எடுக்க வேண்டும். இல்லையேல் துக்க வீட்டைக்கூட கொண்டாட்ட நிகழ்வு போல மாற்றிவிடுகிறார்கள். கொடுமையான நிகழ்வு இது. இதுபோன்ற நிகழ்வுகள் முற்றிலும் தடுக்கப்பட வேண்டிய ஒன்று’ எனக் கொஞ்சம் காட்டமாகவே பதிவிட்டிருந்தார்.

விஜய் ஆண்டனி மகள் மரணத்துக்கு முன்பு நடிகர் மாரிமுத்துவின் மரணத்தின் போதும் ஊடகங்கள் நடந்துகொண்ட விதம் கண்டனத்துக்கு உள்ளானது குறிப்பிடத்தக்கது. இது தொடர்பாக ‘வடக்கன்’ திரைப்படத்தின் தயாரிப்பாளர் வேடியப்பன், ‘மாரிமுத்து இறப்பின்போதும் இதே நிலை. சில ஊடகங்கள் ஒரு படி மேலே போய், செய்தி வெளியான சிறிது நேரத்தில் மாரிமுத்து அவர்களின் ஊரில் உள்ள வீட்டுக்குச் சென்று அங்குள்ள வயதானவர்களின் மனநிலைகளையும் அவர்கள் அழுவதையும் பதிவு செய்துள்ளது கொடுமையிலும் கொடுமை’ என்று கூறியுள்ளார்.

தயாரிப்பாளர் சுரேஷ் காமாட்சியின் கண்டனத்தை வரவேற்றுள்ள எழுத்தாளரும் வசனகர்த்தாவுமான பட்டுக்கோட்டை பிரபாகர், ‘சுரேஷ் காமாட்சி கருத்தை உரத்த குரலில் நான் ஆமோதிக்கிறேன்’ என்று கூறியுள்ளார்.

மேலும், ‘பிரபலங்களின் வீட்டு துக்கம் என்றால் இறுதி அஞ்சலி செலுத்தப் போகிற உறவினர்களும் நண்பர்களும் இந்த மீடியா படைக்கு நடுவில் நீந்தித்தான் உள்ளே செல்லும், வெளியே வரும் நிலை! யாராய் இருந்தாலும் மைக்கை நீட்டி கேள்விகளால் துளைத்தெடுப்பதெல்லாம் துக்கத்தில் இருப்பவர்களுக்குச் செய்கிற கூடுதல் கொடுமை! சாலை முழுக்க மீடியா வேன்களின் ஆக்கிரமிப்பால் போக்குவரத்து நெருக்கடியும் கூட.

இது போதாதென்று முக்கிய அரசியல்வாதிகள், திரை நட்சத்திரங்கள் வரும் போது சூழ்நிலை புரியாமல் அந்த நேரத்திலும் அவர்களுடன் செல்ஃபி எடுக்கப் பாயும் மற்றுமோர் அநாகரிகக் கும்பல்.

எனவே, துக்க வீட்டின் நிகழ்வுகளைப் படம் பிடிக்க மீடியாக்கள் மற்றும் கையில் போன் வைத்திருக்கும் திடீர் மீடியாக்காரர்கள் யாராய் இருந்தாலும் சம்மந்தப்பட்ட குடும்பத்தினரின் எழுத்து பூர்வமான சம்மதத்தைப் பெற வேண்டும் என்று காவல்துறை விதி கொண்டுவர வேண்டும். அல்லது நீதி மன்றமே ஒரு உத்தரவு பிறப்பிக்கலாம்’ என்ற யோசனையையும் முன்வைத்துள்ளார்.

திரைப்பட தயாரிப்பாளர் எஸ்.ஆர். பிரபுவும், ‘பிரபலங்கள் வாழ்க்கையில் நடக்கும் நல்லவை கெட்டவை எதுவாயினும் ஊடகங்களே அவற்றை முக்கியப்படுத்துகின்றன. ஆயினும் ஒருவர் வாழ்வில் துக்க விசயங்கள் நடக்கும் பொழுது, அவை எவ்வாறு கையாளப்பட வேண்டுமென்ற அடிப்படை அறிவும் கடமையும் ஊடகவியலாளர்களுக்கு மிக முக்கியமான பொறுப்பாகும். சமீபத்திய இரு துயர சம்பவங்களில் சில ஊடகங்கள் நடந்துகொண்டவிதம் முற்றிலும் தவறான, அறமற்ற செயல். அதற்காக எனது வன்மையான கண்டனத்தையும், இவ்வாறான போக்கை இனியாவது தவிர்க்குமாறு எனது வேண்டுகோளையும் பதிவு செய்கிறேன்’ என்று கூறியுள்ளார்.

இந்நிலையில், இது தொடர்பாக அறிக்கை வெளியிட்டுள்ள தமிழ் திரைப்பட நடப்பு தயாரிப்பாளர் சங்கத் தலைவரும் மூத்த இயக்குனருமான பாரதிராஜா, அதில் ‘மரணம் கொடுமையானது. அதிலும் அகால மரணங்கள் மிகக் கொடுமையானவை. அப்படியொரு நிகழ்வை சந்திக்கும்போது சொந்த பந்தங்கள், உடன் நட்புகள் கலங்கிப்போகும். செய்வதறியாது திகைத்துப் போகும். அந்நேரம் ஆறுதல் சொல்லுதலே இயலாத காரியம். தேற்றுவதற்கு வார்த்தைகள் இருக்காது. உடன் நிற்பது மட்டுமே சாத்தியமாகும். அந்நேரத்தைக் கூட நம்மால் தர முடியாத நிலைக்குத் தள்ளிவிடுகின்றன சமீப கால மீடியாக்களின் செயல்.

புகழ் பெற்றவர்களின் வீட்டு இழப்பை இவர்கள் படம் எடுத்துப் போடுவதால் தேவையற்ற கூட்டம் சேர்கிறது. வந்து உடன் நிற்க நினைக்கும் பலரை துக்க வீட்டிற்கே வரவிடாமல் செய்துவிடுகிறது.

(தொடர்ச்சி 10ஆம் பக்கம்...)



LOTS FOR SALE

Seven (7) Lots ready to build available for Sale in

Newtonville, Clarington

About 45 minutes East of Toronto

Only 5 minutes from Highway 401

Lot Size (1/2 AC to 1 AC)

For more info. George Paranthaman

416.277.9044

HOMELIFE HIGHER STANDARDS

HomeLife/GTA Realty Inc. Brokerage*

5215 Finch Ave. E. Suite 203, Toronto, ON. M1S OC2

